அவர்கள் 110-வது விதியின் கீழ் ஒரு அறிக்கையை வாசித்தார்கள். அதையொட்டி நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு அறிக்கையை, தன்னிலை விளக்கம் என்ற பெயரால் சொல்லியிருக்கிறார்கள். அதிலே மொத்தமாக இந்த மனைகளை வழங்கியது முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் அமைச்சர்கள், அரசாங்க அதிகாரிகள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்று எல்லாம் மொத்தமாக குறித்திருக்கின்றார்கள். இந்தச் சமயத்தில் நான் சொல்லிக்கொள்வது முதலமைச்சர் அவர்களிடத்திலே, யார் யாருக்கு எல்லாம் இந்த ஓராண்டு காலத்திலே மனை வழங்கி இருக்கிறார்கள். அதிலே யார், எத்தனை பேர் முன்னாள் அமைச்சர்கள், இன்னாள் அமைச்சர்கள் இருக்கிறார்கள் ? அரசாங்கத்திலே சிறந்த சேவை செய்தவர்களுக்கு பொது இடங்களை கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிறந்த சேவை செய்த அதிகாரிகள் யார் யார் என்ற நான் அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் சில இடங்களுக்கு குறிப்பாக.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பூவராகன் அவர்கள் இதை கவனத்தில் கொள்ள வேண்டும். இன்று அலுவலில் உள்ள தொடர்பானவற்றை மட்டும் தான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடியுமே தவிர, இது ஒழுங்குப் பிரச்சினையில் வராது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அருள்கூர்ந்து உட்காரவும்.

திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, இது என்னைப் பொறுத்த பிரச்சினை அல்ல.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி எழுப்புவதாக இருந்தால் என்னிடத்தில் இசைவு கேட்டிருக்க வேண்டும்.

திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, நீங்கள் அன்றைய தினம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய தினம் கேட்டிருக்கலாமே.

(ஆ) சென்னை உயர் நீதிமன்றத்திற்கு நீதிபதிகள் நியமனம் செய்தல் குறித்து.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்பாக செய்தித்தாளில் பார்க்கின்ற நேரத்தில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நான்கு நீதிபதிகள் இடம் காலியாக உள்ளன என்று மத்திய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் 4—4—1989 அன்று ராஜ்ய சபாவில் அறிவித்துள்ளார்கள். அதன் காரணமாக சென்னையிலே உயர்நீதிமன்றத்தில் தற்போது தேங்கிக் கிடக்கும் வழக்குகள் எண்ணிக்கை சுமார் 1,95,200 ஆகும். இப்படி நிறைய வழக்குகள் இருக்கின்ற நேரத்தில் அரசாங்கம் அந்த இடங்களுக்கு நான்கு நீதிபதிகளுடைய பெயரை பரிந்துரை செய்து, விரைவிலே நீதிபதிகளை

அமைத்து அந்த வழக்குகளை விரைவாக முடிப்பதற்கு அரசிடம் ஏதாவது பரிந்துரை இருக்கிறதா ? ஏன் இன்னும் பரிந்துரை செய்யாமல் இருக்கிறார்கள் என்பதைக் கேட்கக் விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச் சந்திரன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து விளக்க விரும்புகிறேன். அந்த நீதிபதி பதவிகள் நிறைவு செய்யப் பட வேண்டும் என்பதற்கான முயற்சிகள் முறைப்படி மேற் கொள்ளப்பட்டு இருக்கின்றன.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர் களே, உங்களிடம் இசைவு பெற்று நான் இந்தச் செய்தியினை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கைத்தறி நெசவாளர்கள் பல்லாயிரம் பேர் அதனை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கைத்தறி நெசவாளர்கள் இங்கிருந்து உற்பத்தி செய்து அமெரிக்க நாட்டிற்கு அனுப்பிய துணிகள் பலவகை அங்குள்ள துறை முகங்களில் தேங்கிக் கிடப்பதாகவும், அமெரிக்க அரசாங்கம் அதை ஏற்க மறுப்பதாகவும், கரூரிலிருந்து இப்படிச் சென்றி ருப்பது மட்டும் ரூ. 80 கோடி மதிப்புடையது என்றும், இந்தியா வினுடைய பல பகுதிகளிலிருந்து சென்றிருப்பதைப் பார்க்கும் போது பல கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதாகவும் அதனால் கைத்தறி நெசவாளர்கள், சாயப்பட்டறையிலே வேலை செய்கின்றவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மிகப் பதைப்போடு செய்தியினைத் தந்து இருக்கிறார்கள். நாளேட்டிலே வந்திருக்கிறது. நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக மத்திய அமைச் சோடு அல்லது பிரதமர் அவர்களோடு தொடர்பு கொண்டு, இங்கு இருக்கின்ற கைத்தறி நெசவாளர்களுடைய துயரைத் துடைக்க வேண்டுமென்று நான் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அது தொடர்பாக உடனடி யாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதனைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு மிக முக்கியமான பிரச்சினை இது. மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் ஒரு ஒத்திவைப்புத் தீர் மானமாகவோ, கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ கொடுத்திருப் பார்களானால் நான் அதை விசாரித்து விவரங்களைச் சேகரித்து இந்த அவைக்கு அளிக்கும்போது அது அவருக்கும், அவைக்கும், பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கும் பயனுள்ள தாக இருக்கும். கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ, ஒத்தி வைப்புத் தீர்மானமாகவோ முறைப்படி தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.